# கைகேயி மாந்தர்படைப்பும் கருத்துருவாக்கமும்

*முனைவர் மு. சுதா*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

**மலர்: 4**

**இதழ்: 3**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2020**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

கம்பரின் கையேயி புதிதாகக் கருத்துருவாக்கம் செய்யப்பட வேண்டிய மாந்தர் படைப்பாவாள். கம்பர், இப்படைப்பை அறம் தவறாத படைப்பாகச் சுட்ட ஆனால் உலகவழக்கில் வேறுவிதமாகப் பதிவு செய்யப்படுகிறது. கம்பரின் கைகேயி, உயிரூட்டமான படைப்பு மட்டுமல்ல, பெண்மையை குறித்தக் கம்பனின் உள்ளத்து உணர்வோட்டப் படைப்பு என்பதே சரியானதாகும்.

வால்மீகியின் கைகேயியைக் கண்டவர்கள் அதேநோக்கில் கம்பரின் கைகேயியையும் நோக்கிப் பதிவுசெய்தது பரிதாபத் திற்குரியது. வால்மீகியின் மாந்தர்களை எடுத்துக்கொண்டாலும் கம்பர் தம் காவியத்தில் அவர்களை சாதாரண மனிதர்களாகப் படைக்காது இனிவருவோர்க்கு முன்னுதாரண மாந்தர்களாகத்தான் உலவச்செய்துள்ளார். இதில் கைகேயி மட்டும் விதிவிலக்கல்ல. காப்பிய மாந்தர்கள் அனைவரிலும் மேம்பட்டவளாக இப்பெண்மையைப் படைத்திருப்பதை ஏன் ஆய்வுலகம் சுட்டக் கூடாது. கம்பனின் உள்ளத்து உணர்வை ஏன் எடுத்துக்காட்டக் கூடாது. இந்த வினாக்கள் ஆய்வுலகிற்கு மட்டுமல்ல இன்றைய மாறிவரும் உலகில் மக்கள் மறந்துபோன பண்பாட்டை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் உதவும்.

அயோத்தியா காண்டத்தின் திருப்புமுனைப்பகுதி மந்தரை சூழ்ச்சிப்படலமாகும். இப்பகுதியில்தான் மந்தரை மாபெரும் குணத்தவளான கைகேயியை மனம் மாற்ற முயற்சிக்கிறாள். தயரதனின் அன்புக்குரியவளும் இராமாவதாரப் பெருநோக்கம் நிறைவேறக் காரணமாயிருந்த இக்கைகேயி காப்பியமாந்தர்கள் அனைவராலும் ஒருசேரக் கொடியவள் என்று கூறப்படுகிறாள். ஆனால் கடவுளின் அவதாரமானக் காப்பியத் தலைவனால் போற்றப்படுகிறாள். கம்பரின் உள்ளம் இங்குக் காப்பியத்தலைவன் கூற்றாலேயே வெளிப்படுகிறது.

வால்மீகத்தில் சாதாரண பெண்களுக்குரிய இயல்புடன் சுட்டப்படும் கைகேயியைக் கம்பரில் காணமுடியவில்லை. இராமன்பால் மிகுந்த அன்புகொண்டவள், பரதனுக்காக இராமனை வனம் புகச்செய்வதாக உரைகண்டோர் கூறுகின்றனர். ஆனால் கம்பன் கவிகளை உற்றுநோக்கக் காணும் தோற்றம் வேறாய் உள்ளது. வால்மீகரைப் பின்பற்றும் கம்பர் செய்த குறிப்பிடத்தக்க மாற்றங்களுள் ஒன்று மாந்தர் படைப்பு. காப்பியமாந்தர்கள் அனைவரையும் முன்னுதாரணமாகக் கொள்ளுமாறு உயர்ந்த பண்புடன் அமைக்கும் கம்பர், கைகேயியை மட்டும் தவறாகச் சித்தரிப்பதாகக் கூறுவதை ஏற்க இயலவில்லை.

சிறுவயதில் துன்பம் இழைத்த இராமனுக்கு இடுக்கண் அளிக்க மந்தரை முயலுகிறாள். உளவியல் நுட்பத்தை இங்கு பயன்படுத்திய கம்பரின் கவிகளையும் கைகேயியின் பாத்திரப் படைப்பை ஆராய உளவியல் நோக்கிலேயே காண வேண்டியது அவசியமாகிறது. இராமன் முடி சூடுவதை நினைத்து அளவில்லாத மகிழ்வடைந்த கைகேயி, கோசலையின் மனநிலையை ஒத்து விளங்குவதாகக் கம்பர் சுட்டுகிறார். இது, அவளது தாயுள்ளத்தைச் சுட்டுகிறது. பரதனுக்கும் சுற்றத்தாருக்கும் துன்பம் வரும் என்று மந்தரை கூறுகையிலும் கைகேயி கலங்கவில்லை. இறுதியில் தயரதன் முறைமை தவறினான் என்றபோது சினத்தின் எல்லை அடைந்து மந்தரையைச் சினக்கிறாள். “எனக்கு நல்லையும் அல்லை என் மகன் பரதன் தனக்கு நல்லையும் இல்லை’ என வெகுண்டுரைக்கிறாள். இவர்களுடைய இந்த உரையாடலை நீண்டு அமைத்த கம்பர் அதன்வழி கைகேயியின் அறம் தவறா பண்பை எடுத்துரைக்கப் பயன்படுத்திக் கொள்கிறார் என்றே கூறவேண்டும். இறுதியில்

**“கெடுத்தொழிந்தனை உனக்கு அரும் புதல்வனை கிளர்நீர்**
**உடுத்த பாரகம் உடையவன் ஒரு மகற்கு எனவே**
**கொடுத்த பேரரசு அவன் குலக் கோமைந்தர் தமக்கும்**
**அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆகுமோ’**

என்று மந்தரை கூறியதும் கைகேயி மனம் மாறியதாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. சில பிரதிகளில் இப்பாடலே இல்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கது. இடைச்செருகல் எனக் கூறப்படும் இப்பாடலே கம்பரின் நோக்கத்திற்கும் கைகேயியின் குணத்திற்கும் ஏன் வால்மீகம்தான் முதல்நூல் என்பதற்கும் சான்றென்பது மிகையாகாது. வால்மீகத்தில் குறிப்பிடப்பட்ட கன்யா சுல்கம் (திருமண சீதனம்) நிகழ்வு, கம்பனில் தெளிவாக எடுத்துரைக்கப்படா விட்டாலும் குறிப்பாகப் பல இடங்களில் சுட்டப்படுகிறது. காலச் சூழலுக்கேற்ப காப்பியம் படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஒரு நல்ல படைப்பாளன் எங்கேனும் ஓர் இடத்தில் குறிப்பாகவாவது உண்மையை உணர்த்தி விடுவான். காப்பியக் கவிஞன் கம்பனை மட்டும் குறைசொல்ல இயலுமா என்ன?. முதலில் மந்தரையால் கெடுத்தொழிந்தாயே என்று திருமணச் சீதன வரம் நினைவூட்டப் படுகிறது. இதற்குப்பிறகே கைகேயி தடுமாறுகிறாள். ஒரு பணிப்பெண்ணால் வாய்மை தவறாதவன் என்று புகழ்பெற்ற தன் கணவனுக்கு தீங்கு வரவிருப்பதை உணர்ந்து முதலில் அவளை அமைதிப் படுத்துகிறாள். மந்தரையிடமே இராமனை அரசேற்க விடாமலிருக்க வழி கேட்டு அவள் சொல்படி நடப்பவளைப்போல் செயல்பட்டு அவளைப் பேசவிடாது செய்த திறமைமிகு கைகேயியைக் கம்பர் காட்டுகிறார்.

பின்னர் தயரதனிடம் போராடி இராமனைக் கானகத்திற்கு அனுப்ப ஒப்புதல் பெற்றவள் அவனுக்கு எவ்வித

அவலநிலைக்கும் தள்ளவிடாது இராமனிடத்து புண்ணியத்துறைகள் நீராடி வா என்று தானே முன்னின்று அனுப்பி விடுகிறாள். இராமனைக் கானகம் அனுப்ப வேண்டாம் என்ற தயரதனிடம் வாய்மை காக்க வேண்டிய மன்னன் அறந்தவறலாமோ என்கிறாள்.தன்னிடத்து அறிவுறுத்தும் வசிட்டனிடம் அழுது மறுக்கிறாள். அரசன், மெய்ம்மையில் மாறுபடுவான் எனில், அவன் ஆட்சிக்கு உட்பட்ட உலகத்தில் இனி வாழுதலை விரும்பமாட்டேன் என்று உறுதியாகக் கூறும் கைகேயியைத்தான் கம்பர் காட்டுகிறார். அறம் அறிந்த குலகுரு அறம் தவறுதல் சரியோ என்று உணர்த்தும் கைகேயியிடம் தொடர்ந்து உரையாடாத வசிட்டரையும் கம்பர் சுட்டுகிறார். பின்னர் தந்தையினைக் காணவந்த பரதனிடம் நடந்ததைக் கூறி அரசை ஒப்படைத்தவள் அதற்குப்பிறகு எங்கும் பேசவில்லை. இங்கு ஏதோஒரு கடமையை நிறைவேற்றிய மன அமைதிகொண்ட கைகேயியைத்தான் காணமுடிகின்றது.

திருமண வரத்தை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் எந்நிலையிலும் வாய்மை தவறாதிருத்தலே சரியென வலியுறுத்துகிறார் கம்பர். இவ்வற வழியில் தயரதனையும் இராமனையும் படைத்துக் காட்டிய கம்பர், கைகேயியை மறைமுகமாக வாய்மைக்காகப் போராடுவதையும் தெளிவுபடுத்துகிறார்.

> **“மாற்றம் அஃது செய்ய மங்கை உள்ளமும்**
> **ஆற்றல் சால் கோசலை அறிவும் ஒத்தவால்’**
>
> ***க:ii:2ஃ1546***

என்று கம்பர் குறிப்பிடக் காரணம் கைகேயியின் உண்மையான உள்ளத்தைப் புலப்படுத்தவேயாகும். மந்தரை வந்து தீண்டுகையில் கருணை அளி பொழியும் கண்களைக் கொண்டவளாகக் கைகேயியைச் சுட்டும் கம்பர், தயரதனின் வாய்மையைக் காக்க தன்மேற்பழி மேற்கொண்ட கற்புக்கரசியாய் கைகேயியைக் காட்டுவதைக் காணமுடிகிறது. இதுகாறும் காத்து வந்த வாய்மையை இறுதியில் நீங்கி வாழுவதை விட அப்புகழுடனேயே அவன் உயிர் துறப்பதும் சரியே என்னும் கொழுநனைத் தொழுதெழும் வள்ளுவர் கண்ட பெண்மையை இங்குக் காணமுடிகின்றது.

தன் காதற் கிழவன் பழியோடு பாவமெய்தி அறங்கொன்றழிவதைத் தடுப்பதே தன்னொரு கடனாகக் கருதி நிற்பாள் தசரதன் பாலன்பும் அவன் பழியில் நாணும் யார் மாட்டும் ஒப்புரவும் அறத்து றையிற் கண்ணோட்டமும் எஞ்ஞான்றும் வாய்மையும் குன்றாக் குணக்குன்றான கைகேயி அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடைந்து சால்பதன்றிய தூண் ஆவளன்றோ? அதனால்தான் தேர்ந்து தெளிந்த அறக்கடனாற்றத் துணிகின்றாள் என்று கைகேயியின் நிறைத்தன்மையைச் சுட்டும் சோமசுந்தரபாரதியாரின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

> **‘தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசால்**
> **சொற்காத்துச் சோர்விலாள் பெண்’**
>
> ***(திருக்குறள்: 56)***

என்பதற்கிணங்க வாழும் பெண்மையைக் கம்பனில் காணமுடிகிறது. மந்தரையிடம் பேசத் தொடங்கியது முதல் அறம் வலியுறுத்தும் கைகேயியை அறம் தவறாத அரசியல் அறிவும் நுட்பமும்பெற்ற கணவன் வாய்மை காக்க பழி மேற்கொண்ட தியாகத்தின் மொத்த உருவமாக மட்டுமே கைகேயியைக் காணவேண்டும். பரதனுக்கு உரிய அரசைப் பரதனிடத்து

அளித்த பின்னர் மட்டுமே கைகேயி அமைதியாகின்றாள். அதன்பின்னர்

**"ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்**
**தாய் எனும் பெயர் எனைத் தடுக்கற்பாலதோ"**

**க:ii:9ஃ2262**

என்று பரதனால் நிந்திக்கப்பட்டபோதும் அவள் அமைதியாகவே இருப்பதைக் காணமுடிகிறது. பெற்ற பிள்ளையிடத்தும் தந்தையின் பெருமைகாக்க நீயில்லாதபோது உனது அரசை மற்றொருவனுக்கு அளிக்க முயன்றவன் உன் தந்தை என்று தயரதன் அறந்தவறியதைச் சுட்டாமல் தன் மகனாலே அளிக்கப்பட்ட கொடுஞ் சொற்களை தாங்கி நின்ற கைகேயியைத்தான் கம்பனில் காணமுடிகிறது.

காப்பியத்தில் தன் தியாகம் தெரியாமல் தன்னையே அழித்துக்கொள்ளும் இப்பண்பின் சிகரத்தினை எங்கேனும் ஒரு இடத்தில் வெளிப்படுத்தாது கவிஞன் விட்டு விடுவானா? பிறரால் இழிவுபடுத்தப்படும் கைகேயியினைக் காப்பியத்தலைவனின்

**"வரன்இல் உந்தை சொல் மரபினால் உடைத்**
**தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்**
**உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்**
**அரசு நின்னதே ஆள்க"**

**க:ii:12ஃ2574**

என்ற கூற்று வழியாகப் புலப்படுத்தித் தன்னையும் தன் படைப்பில் கைகேயி எத்தன்மையுடையவள் என்பதையும் புலப்படுத்துவதோடு திருமண சீதன நிகழ்வையும் பதிவு செய்துவிடுகிறார்.

வால்மீகத்தில் சருக்கம் 107 இல் திருமண சீதன வரம் விளக்கப்படுகிறது. கம்பரில் இவ்வுண்மை இராமன் மூலமாகப் பரதனிடம் கூறப்படுகிறது. இதனை அறிந்த பின்னரே பரதன்அமைதியடைந்து தாய்மீது கொண்ட சினம் தணி கின்றான். அதற்குப்பிறகு எங்கும் அவன் கைகேயியைச் சினப்பதாகக் காட்டாதது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக யுத்தகாண்டத்தில் மூலநூலில் இல்லாத ஒரு காட்சியைப் புகுத்தி கைகேயியின் உயர்வை உலகுக்கு உணர்த்துகிறார். மண்ணுலகு வந்த தயரதன் வரம் கேட்குமாறு கூற இராமனும்

**"தீயள் என்று நீ துறந்த என்தெய்வமும் மகனும்**
**தாயும் தம்பியும் ஆம்வரம் தருக"**

**கம்ப : திடி-10079**

என்கின்றான். இங்குக் கம்பனால் தெய்வமெனப் போற்றப்படுவதை அறிய வேண்டும். கடைக்கண் அருள் பொழிய துயின்றவள் என உளவியல் அடிப்படையில் அவள் எத்தகைய அன்புள்ளம் கொண்டவள் என்பதை உணர்த்திய கம்பர், இறுதியில் அவளைத் தெய்வமென உயர்த்தியதை நுட்பமாக நோக்கி உணரவேண்டும். காப்பியப்போக்கிற்காக கதை அமைக்கப் பட்டாலும், குறிப்பாகவாவது உண்மையைப் பதிவு செய்து விட நினைக்கும் பெண்மையைப் போற்ற நினைக்கும் கவிஞனின் உள்ளம் உளவியல் நோக்கில் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

மாந்தர் படைப்புகள் அனைத்தும் மாற்றுநோக்கில் ஆராயப்படவேண்டும். ஒவ்வொரு காப்பியப் படைப்பாளனும் தன்னைச் சார்ந்த சமூகத்தில் செய்த தொண்டு நற்சிந்தனைகளை விதைத்தது. ஆனால் அதமை மேலோட்டமாகக் காணுவதுடன் காப்பிய ஆசிரியனால் உருவாக்கப்பட்ட கருத்துருவாக்கங்களை மறைத்துப் பதிவு செய்வது வருங்கால சந்ததியினருக்கு இழைக்கும் கொடுமைகளாகும். நற்பண்புகளை மக்கள் மனதில் பதிய வைக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொரு காலப் படைப்பாளனுக்கும் உண்டு.